# மெட்ரோ ரயில் நிலையங்களில் சிற்றுந்து வசதி துவக்கம்



■ மெட்ரோ ரயில் பயணியரின் வசதிக்காக, நேற்று முதல், சிற்றுந்து வசதி துவங்கப்பட்டு உள்ளது. இடம்: எல்.ஐ.சி., மெட்ரோ ரயில் நிலையம், அண்ணா சாலை.

**சென்னை, ஜூலை 30–**

மெட்ரோ ரயில் பயணியருக்கு, நான்கு நிலையங்களில், சிற்றுந்து வசதி, நேற்று முதல் துவங்கப் பட்டது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை; பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில், பயணம் செய்வோர், நிலையங்களில் இருந்து, செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவாக செல்ல வசதியாக, குறைந்த கட்ட ணத்தில், ஷேர் ஆட்டோ, டாக்சி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை மாநகர போக்குவரத்து கழகத்துடன் இணைந்து, கோயம் பேடு, வடபழனி, அசோக்நகர் மற்றும் ஆலந்துார் நிலையங்களில் இருந்து, குறிப்பிட்ட வழித் தடங் களில், சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இத்துடன், ஆலந்துார், எல்.ஐ.சி., தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய நான்கு நிலையங்களில், பயணிய ருக்கு சிற்றுந்து வசதி, நேற்று முதல் துவங்கப்பட்டுள்ளன. 20 நிமிட இடைவெளியில், இந்த சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன.